

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், அம்பலகடை, அருள்மிகு மகாவிஷ்ணு திருக்கோயிலில் ரூ. 14 இலட்சத்து 34 ஆயிரம் செலவில் நடைபெறவுள்ள திருப்பணி வேலைகளை (17.08.2016) அடிக்கல் நாட்டி, துவக்கி வைத்தார். தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 539/2016 நாள்: 18.08.2016

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,**
**கன்னியாகுமரி மாவட்டம்,**
**அம்பலகடை, அருள்மிகு மகாவிஷ்ணு திருக்கோயிலில்**
**ரூ. 14 இலட்சத்து 34 ஆயிரம் செலவில் நடைபெறவுள்ள திருப்பணி வேலைகளை மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், துவக்கி வைத்தார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, மாநிலங்களவை உறுப்பினர் திரு. அ. விஜயகுமார் எம்.பி. அவர்கள், கன்னியாகுமரி மாவட்டம், மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், வெள்ளங்கோடு ஊராட்சிக்குட்பட்ட அம்பலக்கடை பகுதியில் உள்ள அருள்மிகு மகாவிஷ்ணு திருக்கோயிலில் ரூ. 14 இலட்சத்து 34 ஆயிரம் செலவில் மேற்கொள்ள உள்ள திருப்பணிகளை (17.08.2016) அடிக்கல் நாட்டி, துவக்கி வைத்து தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், கன்னியாகுமரி மாவட்டம், அருள்மிகு மகாவிஷ்ணு திருக்கோயிலில் ரூ. 14 இலட்சத்து 34 ஆயிரம் செலவில் மேற்கொள்ள உள்ள திருப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பணிகளை துவக்கி வைக்கப்பட்டது.

இதில் ரூ. 2 இலட்சத்து 85 ஆயிரம் செலவில் மேற்கொள்ள உள்ள திருக்கோயில் மூலவர், சிவன், மடப்பள்ளி விமானம் பழுது பார்த்து புதுப்பிக்கும் பணிகள், ரூ.2 இலட்சத்து 70 ஆயிரம் செலவில் திருக்கோயில் பழுதுபட்ட மின் இணைப்புகளை மாற்றி, புதிய மின் இணைப்பு வேலை செய்யும் பணிகள், ரூ.3 இலட்சத்து 80 ஆயிரம் செலவில் திருக்கோயிலில் வடக்கு வாசல் மண்டபம் பழுது பார்த்து புதுப்பிக்கும் பணிகள், ரூ. 4 இலட்சத்து 99 ஆயிரம் செலவில் திருக்கோயிலில் பழுதடைந்த தந்திரி மடத்தினை மாற்றி புதிதாக கட்டும் பணிகள் என மொத்தம் ரூ. 14 இலட்சத்து 34 ஆயிரம் செலவில் திருப்பணி வேலைகள் நடைபெறவுள்ளது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் சுமார் 25 ஆயிரம் திருக்கோயில்கள், இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில், சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் 490 திருக்கோயில்கள் உள்ளது. இதில் மிகவும் பழமையான திருக்கோயிலில் ஒன்றான, அம்பலக்கடை அருள்மிகு மகாவிஷ்ணு திருக்கோயில் ஆகும். மாண்புமிகு அம்மா அவர்கள், பக்தர்களின் நலன் கருதி, அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் செய்து தருவதற்காகவும், திருப்பணிகள் மேற்கொள்வதற்காகவும், இந்து சமய அறநிலையத்துறைக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்து, ஆணையிட்டுள்ளார்கள்.

மேலும் மக்களுக்கு எது தேவை என்பதை நன்றாக அறிந்த அம்மா அவர்கள், ஒவ்வொரு துறையின் வாயிலாக, பல்வேறு திட்டங்களை அறிவித்து, சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்கள். எனவே நடைபெறவுள்ள உள்ளாட்சி தேர்தலில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள், யாரை வேட்பாளராக அறிவிப்பார்களோ, அவர்கள் அதிக வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற செய்தால், நாகர்கோவில் நகராட்சியை, மாநகராட்சியாக மாற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும், 100 சதவீதம் வெற்றிபெற நீங்கள் அம்மா ஆட்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டும் என பேசினார்.

பின்னர், ரூ.4 இலட்சத்து 99 ஆயிரம் செலவில் நடைபெற்ற திருக்கோயில் மண்டபம் தட்டோடு பதித்து ஒழுக்கு மாற்றுதல் பணிகளையும், ரூ.2 இலட்சத்து 35 ஆயிரம் செலவில் நடைபெற்ற கல் சுவர்களில் படிந்துள்ள அழுக்குகளை அகற்றும் பணிகளையும் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவுத்தலைவர் திரு. சேவியர் மனோகரன், அரசு வழக்கறிஞர் திரு. ஞானசேகர், திரு. என்.என்.-ஐயப்பன், திரு. நாஞ்சில் சந்திரன், மராமத்து பொறியாளர் திரு. ஐயப்பன், நிலஅளவை அலுவலர் திரு. ஐயப்பன், திருவட்டார் கோயில் மேலாளர் திரு. சுதர்சன குமார், திருக்கோயில் கண்காணிப்பாளர்கள் திரு.ஜீவானாந்தம், திரு. ஆனந்தன் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.